**சாட்சிகளின் வாக்குமூலம்**

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 110/2013**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

வாக்குமூலம் – வா.சா–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பெரியசாமி | மதம் | : | இந்து |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025ஆண்டு மார்ச் மாதம் 24ம் நாள் சாட்சியம்.

---

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 03.04.1964 தேதியிட்ட வாதியின் தகப்பனார் முருக கவுண்டரும், முதல் பிரதிவாதியும் செய்து கொண்ட பாகப்பிரிவினைப் பத்திரம் சான்றிட்ட நகல்.

2. 21.04.1993 தேதியிட்ட முதல் வாதியின் பெயருக்கு அவரது தந்தை முருக கவுண்டர் எழுதி வைத்த உயில் பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

3. 21.04.1993 தேதியிட்ட 2ம் வாதியின் பெயருக்கு அவரது தந்தை முருக கவுண்டர் எழுதி வைத்த உயில் பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

4. 21.04.1993 தேதியிட்ட எஸ்.எம்.மணி பெயருக்கு அவரது தந்தை முருக கவுண்டர் எழுதி வைத்த உயில் பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

5. 16.04.2013 தேதியிட்ட க.ச.428–3 நெ.காலைக்குண்டான கணினி சிட்டா பதிவிறக்க நகல்.

6. 16.04.2013 தேதியிட்ட க.ச.428–2 நெ.காலைக்குண்டான கணினி சிட்டா பதிவிறக்க நகல்.

7. 16.04.2013 தேதியிட்ட அடங்கல் பதிவேடு சான்றிட்ட நகல்.

8. 16.04.2013 தேதியிட்ட க.ச.428 நெ.காலைக்குண்டான புலப்படம் சான்று நகல்.

9. 09.03.2012 தேதியிட்ட எஸ்.எம்.பெரியசாமி மற்றும் எஸ்.எம்.மணி ஆகியோர் இளம் மின் பொறியாளர் காரணம்பேட்டை அவர்களுக்கு கொடுத்த ஆட்சேபனை மனுவின் நகல்.

10. தாவா ஏ பட்டியல் சொத்திற்குண்டான புகைப்படங்கள் 9 எண்ணிக்கை

11. தாவா பி பட்டியல் சொத்திற்குண்டான புகைப்படங்கள் 10 எண்ணிக்கை

12. இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 63 பி.எஸ்.ஏ–ன் படியான சான்று.

ஆகியவற்றையும்

1. நீதிமன்ற ஆணையர் அறிக்கை.

2. நீதிமன்ற ஆணையர் வரைபடம்.

3. நிலஅளவையரின் வரைபடம்.

ஆகியவற்றையும் வாதி தரப்பு ஆவணங்களாகவும், நீதிமன்ற சான்று ஆவணங்களாகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12** ஆவணங்கள் ஆகவும் **நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.3** ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.03.24 18:33:11 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.